# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **187/ந/2017**

ஆணை எண். **5/2018**

நாள் : **04/01/2018**

**திரு ஆ. சண்முகம்,**
**சத்தியமங்கலம்.**

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
சத்தியமங்கலம்,
ஈரோடு மாவட்டம்.

– **எதிர் மனுதாரர்**

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், எண்.1/383, காந்திநகர் முகவரியில் வசிக்கும் திரு A. சண்முகம் அவர்களின் 21.07.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 25.09.2017 அன்று பெறப்பட்டு, 187/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக சத்தியமங்கலம் நகராட்சி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், எண்.1/383, காந்திநகர் முகவரியில் வசிக்கும் திரு A. சண்முகம் என்பவர் தனக்கு சத்தியமங்கலம் நகராட்சியில் இன்றைய நாள் வரை சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கப்பட வில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து சத்தியமங்கலம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. நகராட்சி ஆணையர் தனது 23.10.2017 நாளிட்ட அறிக்கையில் மனுதாரருக்கு இதுநாள் வரை வழங்கப்பட்டுள்ள சேமநலநிதிக்கான வட்டித் தொகை மற்றும் 6–வது ஊதியக்குழுவின் நிலுவைத் தொகை வழங்கப்பட்ட விவரங்களைத் தெரிவித்துள்ளார். மேலும், 1997–98 முதல் 2016–17 உள்ள ஆண்டுகளுக்கு பொது மற்றும் 5–வது ஊதியக்குழு நிலுவைத் தொகைக்கு உரிய வட்டித் தொகையைப் பெற கருத்துரு குறைகள் களையப்பட்டு, 20.10.2017 நாளிட்ட கடித எண்.2044/2016/எச்–1 இல் சென்னை உள்ளாட்சி நிதித்

தணிக்கைத் துறை இயக்குநர் அவர்களுக்கு ஈரோடு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உதவி இயக்குநர் மூலமாக கருத்துரு மீள அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளதாக தெரிவித்துள்ளார். கருத்துரு அனுமதிக்கப்பட்டு வட்டித் தொகை பெறப்பட்டவுடன் மனுதாரருக்கு வட்டித் தொகை வழங்கப்படுமெனவும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், மனுதாரரிடம் 01.03.2018 அன்று மேற்கொள்ளப்படவிருந்த விசாரணை இரத்து செய்யப்படுவதுடன் அவரது கோரிக்கை சம்பந்தமாக சத்தியமங்கலம் நகராட்சி ஆணையரை தொடர்பு கொள்ளுமாறு மனுதாரரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2018– ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 4–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு,** அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

8-1-18

8/1/18

பெறுநர்

1. **திரு ஆ. சண்முகம்,**
   **1/383, காந்தி நகர்,**
   **சத்தியமங்கலம்,**
   **ஈரோடு மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **சத்திய மங்கலம் நகராட்சி,**
   **ஈரோடு மாவட்டம்.**

**நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**